911/95.2/91
kr 50. 330/14/80, 15. 28.2.83
கி. ஸ்ரீதரன், எம்.ஏ.,
பதிவு அலுவலர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை
14-D, அனிபா காலனி,
5. டோல்கேட், திருச்சி-620 020.

# கருவூரும், அகழ்வைப்பகமும்

3528/54




ஆசிரியர்கள்

...ந்தரான் — கோ. அர்ச்சுனன்

V21192·K:71
N92
169347





History File

# கருவூரும், அகழ்வைப்பகமும்


ஆசிரியர்கள்

**கி. ஸ்ரீதரன்**, எம்.ஏ.,
பதிவு அலுவலர், திருச்சி

**கோ. அர்ச்சுனன்**, எம்.ஏ.,
காப்பாட்சியர், கருவூர்



தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை
1992

முதற்பதிப்பு - 1992 — பிரதிகள் 1000

வெளியீடு எண், 111

© தொல்பொருள் ஆய்வுத்துறை

கருவூரும், அகழ்வைப்பகமும்

ஆசிரியர்கள்

கி. ஸ்ரீதரன், எம்.ஏ.

கோ. அர்ச்சுனன், எம்.ஏ.

V21192·K:71
N92

விலை : ரூ. 4-75

தமிழ்நாடு
169347
600

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

# பதிப்புரை

'கருவூரும் அகழ்வைப்பகமும்' என்ற இத்துணை நூல் கருவூரின் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து தொடங்கி நாயக்கர் காலம் வரை ஆராய்கிறது. கருவூரில் இத்துறையால் அகழாய்வு செய்யப் பெற்ற பொழுது கிடைத்துள்ள தொல்பொருட்களின் துணை கொண்டும், இலக்கியங்களின் துணை கொண்டும் கருவூரின் வரலாற்றுச் சிறப்பு எடுத்தியம்பப்பட்டுள்ளது. வரலாற்று சிறப்பு மிக்க கருவூரில் இத்துறையால் ஒரு அகழ்வைப்பகம் அமைக்கப் பெற்று, சென்ற சில ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இவ்வகழ் வைப்பகத்தில் உள்ள காட்சிப் பொருள்களைப் பற்றியும் இந்நூல் விளக்குகிறது.

காட்சியகத்தைக் காண வருகின்ற பொது மக்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த துணை நூலாக அமையும். இந்நூலை எழுதியுள்ள இத்துறையின் அலுவலர்களான திரு. கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர்; திரு. கோ. அர்ச்சுனன், காப்பாட்சியர் ஆகியோரைப் பாராட்டு கிறேன். இந்நூலை அச்சாக்குவதற்குத் தகுந்த வகையில் செப்பம் செய்து தந்த திருமதி. மார்க்சீய காந்தி, உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர்; திருமதி. பத்மாவதி, திருமதி. வசந்தகல்யாணி, கல்வெட்டாய்வாளர்கள் ஆகியோருக்கும் அச்சுப் பிரிவின் அனைத்து அலுவலர்களுக்கும் எம் நன்றி.

**நடன. காசிநாதன்**
**இயக்குநர்**

# கருவூர்

திருச்சி மாவட்டத்திலுள்ள சிறப்புமிக்க நகரங்களில் கருவூரும் ஒன்று. திருச்சிக்கு மேற்கே சுமார் 80 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வூர் கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தனித்தன்மை வாய்ந்த வரலாற்றினைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

## வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய கருவூர்

கருவூரின் வரலாறு, வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே அதாவது பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து துவங்குகிறது.

பெருங்கற்காலச் சான்றுகளான ஈமச்சின்னங்களுள் கல்வட்டம், கற்குவை போன்றவை கருவூரை அடுத்துள்ள ஊர்களில் காணப் படுகின்றன. புகளூர், காருடையாம்பாளையம், மண்மங்கலம், மலைக்கோயிலூர், அரவக்குறிச்சி, சின்ன ஆண்டாங்கோயில், திருமுக்கூடல், கொத்தபாளையம், தென்னிலை, ஆத்தூர் போன்ற ஊர்களில் இத்தகைய ஈமச்சின்னங்களைக் காணலாம்.

புகளூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பூமியைத் தோண்டும் பொழுது கிடைத்த கருப்பு-சிவப்பு வண்ணமுள்ள மட்பாண்டங்கள் கருவூர் அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கருவூர் திண்டுக்கல் சாலையில் அரவக்குறிச்சிக்கு வடமேற்கே உள்ள கொத்த பாளையம் என்ற ஊரில் பூமிக்கடியிலிருந்து எடுக்கப்பட்ட முதுமக்கட் தாழிகளில் கிடைத்த மட்கலயங்களில் ஒரே மாதிரியான குறியீடுகள் (**Graffiti**) காணப்படுகின்றன. இக்குறியீடு உடைமை யாளரின் பெயரைக் குறிக்கிறதா அல்லது குலச் (**Totemic Symbol**) சின்னத்தைக் குறிக்கிறதா என்பது பற்றி மேலும் ஆய்வு செய்தல் வேண்டும்.

## வரலாற்றுச் சிறப்பு மிக்க மேடுகள் (MOUNDS)

கருவூரைச் சுற்றியுள்ள பல ஊர்களில் நத்தமேடு என அழைக்கப் படும் பழமையான வரலாற்றுச் சிறப்புமிக்க மேடுகள் காணப் படுகின்றன. இவைகளிலிருந்து கிடைக்கும் தொல்பொருட்கள் கருவூரின் பழமையான வரலாற்றுக்குச் சான்றளிப்பவையாகத் திகழ் கின்றன. மணவாசி, புதுக்கோட்டை, மண்மங்கலம், வெஞ்சமாக் கூடலூர், ஆத்தூர், வேட்டமங்கலம், மகாதானபுரம், பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் போன்ற ஊர்களில் மண்மேடுகள் காணப்படுகின்றன. இம் மண்மேடுகளிலிருந்து அறுத்த சங்கு வளையல்கள், கறுப்பு-சிவப்புப் பானை ஓடுகள், மத்திய காலத்தைச் சேர்ந்த ஓடுகள், கலையழகு மிக்க சுடுமண் பொம்மைகள் போன்றவை கிடைத்துள்ளன.

## தாய் சேய் சுடுமண் பொம்மை

கருவூருக்கு அருகே உள்ள மண்மங்கலத்திலிருந்து மூன்று சுடு மண் பொம்மைகள் கிடைத்துள்ளன. இதில் ஒரு தாய் அமர்ந்த நிலையில் இருக்கிறாள். அவளின் தொடையின் மீது அமர்ந்து குழந்தை பால் குடிப்பது போலக் காணப்படுகிறது. இது போன்ற சுடுமண் பொம்மைகள் பல இடங்களில் கிடைத்துள்ளன. கருவூருக்கு அருகிலேயே அரவக்குறிச்சி என்ற ஊரிலும் இது போன்ற பொம்மை கிடைத்துள்ளது. மேலும் கருவூருக்கு அருகில் திருக்காம் புலியூர் என்ற இடத்தில் நடைபெற்ற அகழராய்ச்சியிலும் இது போன்ற சுடுமண் பொம்மை கிடைத்துள்ளது சிறப்பானதாகும். பழனிக்கு அருகிலும் இதுபோன்ற பொம்மை கிடைத்துள்ளது. கொங்கு நாட்டுப் பகுதியில் குலாலக் குடும்பத்தினர் இது போன்ற உருவங்களைச் செப்புத்திருமேனிகளிலும் (Folk Bronzes) செய்து வழிபடுகின்றனர். காவிரியின் வடகரையில் தொட்டியம் பகுதியில் இத்தகைய உருவங்களைக் 'கொப்பட்டி அம்மன்' என்று கூறி வழிபடுகின்றனர்.

கருவூருக்கு அருகில் திருக்காம்புலியூர் மற்றும் காவிரியின் வட கரையில் உள்ள அளகரை ஆகிய ஊர்களில் அகழாராய்ச்சிகள் நடை பெற்றுள்ளன. பல சுடுமண்பொம்மைகள், தானியங்களைப் பாதுகாக்கும் அறைகளை கொண்டக் கட்டட அமைப்பு போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதாரங்கள் அகழாய்வில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

## கருவூர் வரலாறு

தமிழக வரலாற்றில் கருவூர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. இது 'வஞ்சி' என்றும் அழைக்கப் பெற்றிருந்தது. ஆன்பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள இக்கருவூரே சங்கக் காலச் சேரமன்னர்களின் தலைநகர் என்ற ஒரு கருத்தும் உண்டு. இக்கருத்திற்கு பல சான்றுகள் மேலும் வலிமை சேர்த்து வருகின்றன.

சங்க காலத் தொடக்கத்திலிருந்தே கருவூர்-வஞ்சி ஒரு பெரு நகராகத் திகழ்ந்தது. இலக்கியங்கள், கல்வெட்டுகள், காசுகள் அகழாய்வு ஆகிய அனைத்துச் சான்றுகளும் கருவூரின் தொன்மையை எடுத்தியம்புகின்றன.

சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை என்ற அரசன் கருவூரில் இருந்து அரசாண்டான். ஒரு சமயம் அவன் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவருடன் வேண்மாடத்தில் அமர்ந்திருந்தான். அப்போது முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னன் தன் யானை மீதமர்ந்து கருவூர் நோக்கி வருவதைக் கண்டான். சோழனுடைய யானை மதம் பிடித்து வழி தவறிக் கருவூர் வந்தது. அதைத் தவறாகக் கருதி சேரமன்னன் சோழனைக் கொன்று விடப் போகிறான் என்று எண்ணி உடன் இருந்த புலவரான முடமோசியார் உண்மையை எடுத்துரைத்ததாகப் புறப்பாட்டு ஒன்று கூறுகிறது. இதிலிருந்து கருவூர் சோழநாட்டின் எல்லைக்கு அருகாமையில் இருந்ததாகச் சிலர் கருதுகிறார்கள்.

சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்று அறிகிறோம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தனது எதிரிகளை அவர்களது தலைநகரில் தோற்கடித்தான். மாந்தரஞ் சேரலிரும்பொறை பாண்டியன் நெடுஞ்செழியனால் சிறைப்படுத்தப்பட்டான் என்ற செய்தியும் பின்னர் அச்சேரமன்னன் மீண்டும் அரியணையிலமர்ந்து ஆட்சி செய்தான் என்ற செய்தியும் புறநானூற்றுப் (புறம் 17) பாடல் மூலம் தெரியவருகிறது.

சோழன் நலங்கிள்ளியும் கருவூரைக் கைப்பற்றினான். அவனைப்பாடும் கோவூர்க்கிழார் அவன் 'பூவா வஞ்சியையும் தருகுவன்' எனக் கூறுகிறார். இதை உரையாசிரியர் 'பூவா வஞ்சி யென்பது கருவூருக்கு வெளிப்படை' எனக் கூறுகிறார்.

கருவூர், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால் முற்றுகையிடப்பட்டது. ஆலத்தூர் கிழார் இதைச் சிறக்கப்பாடி யுள்ளார். இம் முற்றுகையின் போது சேரன் தன் அரண்மனையை விட்டு வெளியே வரவில்லை. சோழர் படை கருவூர்க் காவற்காடு களை அழித்தது. அவ்வாறு வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்கள் ஆன் பொருநையாற்றின் மணலைச் சிதைத்தன. சோழன் வஞ்சி மாநகரை வாட்டுவதை நேரில் கண்ட ஆலத்தூர்க் கிழார் புறம் 36ல்

சிலம்பின் குறுந்தொடி மகளிர் பொலஞ் செய்
கழங்கில் தெற்றியாடும் தண்ணான் பொருநை
வெண் மணல் சிதைய

என்று பாடுகிறார்.

கிள்ளிவளவன் கருவூரை முற்றுகையிட்டிருந்தபோது அதை நேரில் கண்ட மற்றொரு புலவரான மாறோக்கத்து நப்பசலை யாரும் சோழனுடைய ஆற்றலைப் பாடியுள்ளார், (புறம் 37 : 39). அப்பாடலில், கருவூரைச் சுற்றி ஆழ்ந்த அகழிகள் இருந்தன; அவற்றில் நீர் மிகுந்து இருந்தது; அவற்றில் முதலைகள் சுற்றித்

திரிந்தன; அவ்வூரை நீ அழிக்கிறாய்; சேரனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் பெருமை நினது என கீழ்வரும் பாடலில்

இமயஞ் சூட்டிய ஏம விற் பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன்
தொலைய வாடா வஞ்சி
வாட்டு நின் பீடு

எனப் பாடுகிறார். இக்கருவூர்ப் போரில் சேரன் தோற்ற செய்தியையும் குராப்பள்ளியில் துஞ்சிய கிள்ளிவளவனும் கருவூரைக் கைப்பற்றிய செய்தியையும் மற்றொரு புறப்பாட்டு (373) கூறுகிறது.

சேரன் செங்குட்டுவனின் தலைநகர் வஞ்சியே என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகளைக் கூறலாம். செங்குட்டுவன் ஆண்ட வஞ்சி ஆன்பொருநைக் கரையில் இருந்தது எனச் சிலம்பு தெரிவிக்கிறது.

- வாழியரோ வாழி வரு புனல்
நீர் ஆன்பொருநை
சூழ் தரும் வஞ்சியார் கோமான்
தன் தொல்குலமே

-சிலம்பு-வாழ்த்து-4

காவிரியாற்றோடு ஆன்பொருநையும் குடவனாறும் கலக்கும் கூடல் போன்றவன் செங்குட்டுவன் என்று பரணர் பதிற்றுப்பத்தில் பாடுகின்றார். கூடல் என்பது கருவூரின் அருகே உள்ளது. இங்கு ஆன் பொருநையாறு காவிரியாற்றில் கலக்கிறது. தற்பொழுது இவ்வாறு அமராவதி என அழைக்கப்படுகிறது.

கருவூர் ஆன்பொருநைக் கரையில் இருந்தது என்றும், அது சேரர்களின் தலைநகராயிருந்தது என்றும், அகநானூற்றுப்பாடல் ஒன்று

கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருமாவியல் நகர் கருவூர் முன்துறை

என்று கூறுவதிலிருந்து அறியலாம்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ கருவூரில் இருந்து ஆட்சி செய்தான் எனவும், ஆன்பொருநை ஆற்றங்கரையில் இருந்த வஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டவன் எனவும் புறப்பாட்டு 11-இல்

தண்பொருநைப் புனல் பாயும்
விண்பொரு புகழ் விறல் வஞ்சி

எனக் கூறப்படுகிறது. மேலும் புறநானூற்றுப் பாடல் 387-இல்

வஞ்சிப் புறமதில் அலைக்கும் கல்லென்
பொருநை

என்று கூறப்பட்டுள்ளது இதனால் கருவூர் ஆன்பொருநை எனப் படும் ஆமராவதி ஆற்றின் கரையில் இருந்தது என்பது புலனாகிறது

## வெளிநாட்டார் குறிப்புகள்

கிரேக்க நில நூல் வல்லாரான தாலமி என்பார் 'கொரேவூரா' என்னும் ஒரு இடத்தினைக் குறிக்கிறார். உள்நாட்டு நகர்களில் அரசிருக்கையாக கொரேவூரா (கருவூர்) உளது என்று அவர் குறிப்பு களிலிருந்து அறியமுடிகிறது.

சங்க காலத்தினை அடுத்து, கருவூர் களப்பிரரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

## பாண்டியர் ஆட்சியில்

கி பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்னும் பாண்டிய மன்னன் ஆண்டான். இவனே கூன் பாண்டியன் என்றும், நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் என்றும் புகழப் பெற்றவன். இவன் மீது பாண்டிக் கோவை என்னும் நூல் இயற்றப்பட்டுள்ளது. இதில் பாண்டிய மன்னன் பலமுறை சேரனை வெற்றி கண்டான் எனக் கூறப்பட்டுள்ளது. இச் செய்தியை வேள்விக் குடிச் செப்பேடும், சின்னமனூர்ச் செப்பேடு களும் உறுதிப்படுத்துகின்றன.

## பல்லவர் ஆட்சியில்

சற்றேறக்குறைய இதே காலத்தில் பல்லவப் பேரரசு காவிரி யாற்றங்கரை வரையில் தனது ஆட்சியை விரிவுபடுத்தியது. பல்லவப் பேரரசர்களில் சிம்மவிஷ்ணு, நரசிம்மனாகிய மாமல்லன் ஆகிய இருவரும் சேரரைத் தோற்கடித்ததாகக் கூறுகின்றனர். இப்போர் கள் கருவூருக்கு அண்மையில் நடைபெற்றனவா எனத் தெரியவில்லை.

கி.பி. 730லிருந்து 765 வரை ஆட்சி செய்த தேர்மாறன் என்று புகழ்பெற்ற மாறவர்மன் இப்பகுதி மீது போர்த்தொடுத்திருக் கிறான். இவன் காவிரியைக் கடந்தான். மழகொங்கம் அடிப்படுத் தினான். பாண்டிக் கொடுமுடி சென்றான். அங்கு பசுபதியைப் பணிந்தான் என வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

இராஜசிம்மனுக்குப் பிறகு அவன் மகன் பராந்தக நெடுஞ் சடையன் மீண்டும் இப்பகுதி மீது படையெடுத்தான். இவன் பல்லவனைக் காவிரியின் தென் கரையிலுள்ள பெண்ணாகடத்தில் வென்றான். பின்னர் வடகரையில் ஆயிரவேலி அயிரூரிலும். புகழியூரிலும் அதியனை வென்றான். அதியனுக்கு உதவியாகப் பல்லவனும் கேரளனும் வந்தனர். அவர்களை நெடுஞ்சடையன் வென்றான் எனச் சீவரமங்கலம் செப்பேடு கூறுகிறது.

புகழியூர்ப் போருக்குப் பிறகு அப்போரின் தொடர்ச்சியாகக் கருவூரிலும் போர் நடந்திருக்கிறது. கருவூரிலும் பல்லவனும் கேரளனும் பாண்டியனை எதிர்த்துத் தோற்றிருக்கின்றனர். இதனைத் தளவாய்புரச் செப்பேடு

> காடவனைக் கரூரில் கால் கலங்கக்
> களிறுதைத்த கூடலர் கோன்

எனக் கூறுகிறது. ஆனால் இக்கருவூர் வெற்றி நிரந்தரமான வெற்றி யாக இல்லை. இப்போரில் முதலில் தோற்றவன் பல்லவ மன்னன் நந்திவர்மன் ஆவான். இவன் மீண்டும் கருவூரைத் தாக்கி பாண்டிய

னிடமிருந்து அதைக் கைப்பற்றியிருக்கிறான். இம்மன்னனின் சம காலத்தவரான திருமங்கையாழ்வார் இவனது வெற்றிகளைப் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில்

உலகுடை மன்னவன் தென்னவனைக்
கன்னி மாமதில் சூழ் கருவூர் வெருவப்
பலபடை சாய வென்றான்

என்று பாடியுள்ளார். எனவே பல்லவ மன்னர்களின் ஆட்சிக்குக் கருவூர் உட்பட்டிருந்தது என்பதை அறிகிறோம்.

இதே காலத்தைச் சேர்ந்த கருவூர் நடுகற்களில் ரவி கோக்கலியன் என்ற ஒருவனைப்பற்றியும், வஞ்சி வேளடியான் என்பவனைப் பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

## சோழர் காலத்தில்

சங்ககாலச் சேரர்களுக்குப் பின்னர் கருவூர் சில காலம் சோழ ராட்சிக்கு உட்பட்டிருந்தது. கருவூர் சோழர்களின் குல மரபில் முதல் தனி நகர் எனக் கூறப்படுகிறது. சோழ நாட்டில் கரிகாலனுக்கு ஆபத்து நேர்ந்த போது சேர மன்னர்கள் உதவியுள்ளனர். கருவூரிலிருந்து கரிகாலன் சோழ அரியணை ஏறியதால் கருவூரைச் சோழர் குல மரபின் தனிநகர் எனக் குறிப்பர்.

கருவூர் சோழராட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை எறிபத்தர் வரலாற்றில்

மானிய அநபாயன் சீர் மரபின்
மாநகரமாகும்
தொன்னெடுங் கரூர்

எனச் சேக்கிழார் பெருமான் போற்றுகின்றார்.

புகழ்ச்சோழரும் கருவூரை ஆட்சி செய்திருக்கிறார். அவரது அமைச்சர்கள் அதியமான் திறை கொண்டு வரவில்லை எனக் கூறினர். அவனது அரணைத் தூளாக்க அரசன் ஆணையிட்டான். சோழரது படை அதிகன் படையோடு குறும்பொறையூர் என்னும்

இடத்திலும், நொச்சி என்னுமிடத்திலும் போரிட்டு அதியன் படை தோற்கடிக்கப்பட்டது.

கி.பி 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் கருவூர் சோழப் பேரரசின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. ஆதித்த சோழன் கொங்குநாட்டைக் கைப்பற்றினான். முதல் இராஜராஜன் காலத்தில் இப்பகுதி 'கேரளாந்தக வளநாடு' எனப்பெயர் பெற்றது. இராஜராஜன் தனது தூதனைச் சேர மன்னன் சரிவர நடத்தவில்லை என்ற காரணத்தால் ஒரே பகலில் 13 சுரங்களைக் கடந்து மலை நாட்டைப் பிடித்தான் என உலாக்கள் கூறுகின்றன. சேரனை வென்று 'கேரளாந்தகன்' எனப் பெயர் பெற்றான். சேரன் ஆண்ட பகுதி 'கேரளாந்தக வளநாடு' எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது பின்னாளில் 'அதிராஜராஜமண்டலம்' எனவும் மாற்றம் பெற்றது.

கருவூரில் முதலாம்இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், வீர ராசேந்திரன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன.

## முடிவழங்கு சோழபுரம்

மூன்றாம் குலோத்துங்கச் சோழனது ஆட்சி தொடங்குவதற்குச் சற்று முன்னர்க் கருவூர் சேரர்களால் மீட்கப்பட்டது. ஆதலின் மூன்றாம் குலோத்துங்கன் கருவூரின் மீது படையெடுத்தான். கருவூர்ப் போர் மிகவும் கடுமையாக நடந்திருக்க வேண்டும். மூன்றாம் குலோத்துங்கச் சோழனுடைய மெய்க்கீர்த்தி "மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட" என்று தொடங்குவதிலிருந்தே அவ்வெற்றியை அவன் எவ்வளவு சிறப்பாகக் கருதினான் என்பதை அறிய முடிகிறது. இவன் காலத்தில் கொங்கு நாடு 'சோழ கேரள மண்டலம்' எனப் பெயர் பெற்றது. சேரன் குலோத்துங்கனை வணங்கினான். அவனுக்கு மீண்டும் முடி வழங்கப்பட்டது.

கருவூர் 'முடிகொண்ட சோழபுரம்' எனப் பெயர் பெற்றது. இதை இவனது மெய்க்கீர்த்தி;

பூழியர் கெடக் கொங்கும் பாழ்படப்
பொருது புக்குக் கருவூரில் சோழ
கேரளன் என்று மன்னர் தொழ
விசைய மாமுடி சூடி

எனக் குறிக்கிறது.

மூன்றாம் இராஜராஜன் காலத்தில் போசளர்கள் இங்கு வந்துள்ளனர்.

பின்னர் இப்பகுதி பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்கு மாறியது என்பதற்குச் சான்றாகச் சுந்தர பாண்டியன், வீர பாண்டியன் ஆகியோரது கல்வெட்டுக்கள் இப்பகுதியில் காணப் படுகின்றன.

விஜயநகர மன்னர், நாயக்க மன்னர் காலத்திலும் கருவூர் அம்மன்னர்களின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. பசுபதீசுவரர் கோயிலில் சொக்கலிங்க நாயக்கரின் கல்வெட்டு காணப் படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

**பிற்காலத்தில்**

பின்னர் கருவூர் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சியையும் கண்டது. கருநாடகப் பகுதிகளைத் தாக்கி வெற்றி கொண்ட மைசூர் மாவீரன் ஹைதர் அலியும் கருவூரை வெற்றிக் கொள்வதில் பெருமை கண்டான். கி.பி. 1760ல் ஆங்கிலத் தளபதி கேப்டன் ரிச்சர் ஸ்மித்தின் படையெடுப்பையும், தஞ்சை மராட்டிய வேந்தன் துளஜாஜியின் படையெடுப்பையும் கருவூர் சந்தித்துள்ளது.

வரலாற்றுப் புகழ்மிக்க ஆங்கில-மைசூர்ப் போர்களில் கருவூர்ப் பகுதி முக்கிய இடம் பெற்று விளங்குகிறது. இறுதியாகக் கருவூர்ப் பகுதியும் ஆங்கிலேயர் ஆட்சிக்குக் கொண்டு வரப்பட்டது.

———

## புகழ்ச்சோழர் ஆட்சி செய்த ஊர் கருவூர்

உறையூரைத் தலைமை இடமாகக் கொண்டு ஆண்ட சோழ மன்னர்களுள் புகழ்ச்சோழரும் ஒருவர். இவர் முறை தவறாது ஆட்சி செய்ததுடன் அருமறை சைவம் தழைக்கவும் அரசாண்டார் என்கிறார் சேக்கிழார்.

ஆண்டிற்கொருமுறை கருவூரில் வந்து தங்கித் தம் கீழ் வாழும் சிற்றரசர்கள் திறை செலுத்துவதைப் பெற்றுக் கொண்டிருந்தார். திறை செலுத்தாமல் அதியன் என்னும் மன்னன் உள்ளான் என அமைச்சர்கள் கூறினர். புகழ்ச் சோழரும் அதியனை அடக்க ஆணையிட, அமைச்சர்கள் படையொடு சென்று அதியனின் கோட்டையை முற்றுகையிட்டனர். அப்போர் மிக விரைவாக முடிந்துவிட்டது எனச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். போர் முடிந்ததும் அதியன் ஓடி ஒளிந்தான். இறந்து பட்ட முக்கியமான வீரர்களின் தலைகளை ஒரு கூடையில் வைத்து ஏந்திக் கொண்டு சோழனுடைய அமைச்சர்கள் கருவூர் வந்து சேர்ந்தனர். அத்தலைகளைக் கண்ட புகழ்ச்சோழர், அவற்றுள் சடைமுடியுடன் கூடிய ஒரு தலையைக் கண்டார்.

சிவபெருமானுடைய நெறியைப் பின்பற்றும் அடியவர் ஒருவரின் தலையைக் கண்டு மனம் வருந்தினார். தன்னால் ஏற்பட்ட இக் கொடுமைக்குப் பரிகாரமாய் அரச பதவியைத் துறந்து தன் மைந்தனுக்கு முடிசூட்டிய புகழ்ச்சோழர், ஒரு தங்கத் தட்டில் சிவனடியாரின் வெட்டுண்ட தலையைத் தாங்கிக் கொண்டு தீவளர்த்து அதனுள் புகுந்துவிட்டார். அத்தகைய பெருமைவாய்ந்த புகழ்ச் சோழர் ஆண்ட ஊர் கருவூராகும்.

## கல்வெட்டுக்களில், செப்பேடுகளில் கருவூர்

புகளூர் ஆறுநாட்டார்மலைக் கல்வெட்டு 'கருஊர்ப் பொன் வாணிகன் அதிட்டானம்' என்று குறிப்பிடுகிறது. இதில் வரும் கருஊர், அருகில் உள்ள கருவூரையே குறிக்கிறது.

கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டைப் பெரும் புகழுடன் ஆட்சிபுரிந்த ஜடிலவர்மன், காடவனைக் கருவூரில் வென்றான் என்று தளவாய்புரச் செப்பேடு கூறுகிறது.

## கருவூர் நடுகற்கள்

கருவூரில் இரண்டு நடுகற்களைத் தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்தது.

ஒன்றில் "(ர)வி கோ கலயந் மவந் கருவூரிடைய தந்நாநிரை கொளலெறிந்து பட்டான்" என்றும்;
மற்றொன்றில் "ஸ்ரீவஞ்சி வேளடியாந்" என்றும் காணப் படுகிறது.

இரண்டிலும்மன்னன் பெயர் குறிப்பிடப் படவில்லை. கி. பி. 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் இவ்வூர் கருவூர் என்றும் வஞ்சி என்றும் வழங்கப்பட்டது என்பதை இக்கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

வீரராஜேந்திர சோழனின் (கி.பி. 1065-70) காலத்தில் அதிராஜராஜ மண்டலத்தை சேர்ந்த வெங்கால நாட்டில் அடங்கிய ஊராகக் கருவூர் இருந்தது என்பதைக் கருவூர்ப் பசுபதீசுவரர் கோயில் கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

## முடிவழங்கு சோழபுரம்

மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் (1178-1218) வெங்கால நாட்டில் கருவூர் என்னும் 'முடிவழங்கு சோழபுரம்' அடங்கியிருந்ததாக அறியப்படுகிறது.

இம்மன்னன் தனது கல்வெட்டுக்களில் **"மதுரையும் ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட கோப்பரகேசரி" என்று புகழ்ந்து கூறிக் கொள்வதால் கருவூரில் அன்றிருந்த ஒரு சேர மன்னனை வெற்றி கொண்டான் எனலாம்.**

### நெரூர் கல்வெட்டு

நெரூர்ப் பெருமாள் கோயில் கல்வெட்டிலும், பசுபதீசுவரர் கோயில் கல்வெட்டிலும் 'வஞ்சி மாநகரமான கருவூர்' என்றும்; கருவூர் அரங்கநாதர் கோயில் கல்வெட்டில் 'வஞ்சி ஸ்ரீ வைஷ்ணவ ரோம்' என்றும் கூறப்பட்டுள்ளதால் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை இவ்வூர் கருவூர் எனவும், வஞ்சி எனவும் பெயர் பெற்றிருந்தது என்று அறியலாம்.

## சங்கப் புலவர்கள்

சங்கத் தொகுப்பில் உள்ள பாடல்கள் பலவற்றைக் கருவூரைச் சேர்ந்த புலவர்கள் பாடியுள்ளதை அறிகிறோம். அவர்கள் பெயர்களும், பாடிய பாடல்களும் வருமாறு :

| | |
|---|---|
| கதப்பிள்ளை... | நற்றிணை 135 |
| | குறுந்தொகை 380, 64, 265 |
| | புறநானூறு 380 |
| கதப்பிள்ளைச்சாத்தனார் | நற்றிணை 343 |
| | அகநானூறு 309 |
| | புறநானூறு 168 |
| கருவூர் கிழார் | குறுந்தொகை 170 |
| கண்ணம்பாளனார் | அகம் 180, 263 |
| கலிங்கத்தார் | அகம் 183 |
| கோசனார் | நற்றிணை 214 |
| சேரமான் சாத்தன் | குறுந்தொகை 268 |
| நன்மார்பனார் | அகம் 277 |
| பவுத்திரனார் | குறுந்தொகை 162 |
| பூதஞ்சாத்தனார் | நற்றிணை 50 |
| | அகநானூறு 50 |

பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் புறநானூறு 219

ஓதஞானி.. அகநானூறு-63;
நற்றிணை 159, 277.
குறுந்தொகை - 71;

## கருவூர் அகழாய்வு

இவ்வூரின் தொன்மையினை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கருவூர் நகரில் வெவ்வேறு இடங்களில் அகழாய்வு செய்யப்பெற்றன.

| | இடம் | ஆண்டு |
|---|---|---|
| கருவூர்-1 | ஜெயபிரகாஷ் துவக்கப்பள்ளி | 1973-74 |
| ,, 2 | ,, | |
| ,, 3 | சி.எஸ்.ஐ. உயர்நிலைப்பள்ளி மைதானம் | 1977 |
| ,, 4 | துணை ஆட்சியர் அலுவலகம் | ,, |
| ,, 5 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி மாணவர் விடுதி | 1979 |
| ,, 6 | பெண்கள் மேனிலைப் பள்ளி | ,, |

மேற்கண்ட ஆறு இடங்களிலும் நடைபெற்ற அகழாய்வுகள் கருவூரின் வரலாற்றினை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

ஜெயபிரகாஷ் துவக்கப்பள்ளியில் நடைபெற்ற அகழாய்வில் சங்க காலத்தைச் சேர்ந்த கட்டடப்பகுதிகள் வெளிப்படுத்தப் பட்டன. இது கழிவு நீர்ப் பாதையுடன் கூடிய ஒரு வீட்டின் பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறதுது. சி. எஸ். ஐ. உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அகழாய்வில் அகஸ்டஸ்

மன்னனின் உரோமானிய வெள்ளிக்காசு ஒன்று கிடைத்தது. கருவூர் 4 என்ற குழியில் கருங்கற்களால் அமைக்கப்பட்ட கோட்டைச்சுவரின் ஒரு பகுதி வெளிப்படுத்தப்பட்டது. ஆண்கள் மேல் நிலைப்பள்ளி மாணவர் விடுதியில் நடைபெற்ற அகழாய்வில் கட்டடப்பகுதிகளும், வெண்மை நிறமுள்ள பானை ஓடுகளும் கிடைத்தன. இப்பானை ஓடுகள் கயோலின் இனப் பானை ஓடுகள் (Kaolin Ware) என அழைக்கப்படுகின்றன. பெண்கள் மேனிலைப்பள்ளியில் நடைபெற்ற அகழாய்வில் பாய் வேலைப்பாடு உள்ள (Mat designed pottery) உரோமானியப்பானை ஓடுகள் கிடைத்தன. பாண்டிச்சேரி அரிக்கமேட்டு அகழாய்விலும் இத்தகைய பானை ஓடுகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. உரோமானியப் பானை ஓடுகளான ரௌலடட் பானை ஓடுகள், ஆம்பொரா என்ற மதுக்குடத்தின் பகுதிகள் போன்றவை கிடைத்திருப்பது கருவூர், உரோமானிய நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பினை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

இதைத் தவிரப் பண்டைத் தமிழ் எழுத்துப் (தமிழ் பிராமி) பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கறுப்பு சிவப்புப் பானை ஓடுகள், பூச்சுப் பூசப்பெற்ற பானை ஓடுகள், (Russet-Coated Ware) கல்மணிகள், சுடுமண் மணிகள் போன்றவை கிடைத்துள்ளன. பண்டைத் தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் ஆகியவையும் சேகரிக்கப்பட்டுள்ளன. 'சாத்தன்', 'னஊறக' என்று எழுதப் பெற்ற சில பானை ஓடுகளும் அவற்றுள் அடங்கும். இது போன்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கொங்கு நாட்டில் ஈரோட்டுக்கு அருகே உள்ள கொடுமணல் என்ற ஊரில் பெருமளவில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பூச்சுப் பூசப்பெற்ற பானை ஓடுகள் கருவூர் அருகே நடைபெற்ற திருக்காம்புலியூர் அகழாய்விலும் அதிக அளவில் கிடைத்திருக்கின்றன. இவ்வகையான ஓடுகள் கொங்கு நாட்டுப் பகுதியில்

V21192·IC:71
N92
169347

கிடைக்கும் சிறப்பான பானை வகையாகும். அகழாய்வில் கிடைத்திருக்கும் தொல் பொருட்கள் கருவூரின் தொன்மைச் சிறப்பினை எடுத்தியம்புகின்றன.

## கருவூர்க் காசுகள், முத்திரைகள், மோதிரங்கள்

கருவூர் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊராக இருப்பதால் நகரிலும், மற்றும் நகரின் அருகே ஓடும் அமராவதி ஆற்றிலும் சங்க காலத்திலிருந்து அண்மைக்காலம் வரையிலான பல காசுகள் கிடைக்கின்றன. அமராவதி ஆற்றில் காசுகள் மட்டுமல்லாமல் செப்பு மோதிரங்கள், பண்டைத் தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட மோதிரங்கள், முத்திரைகள் ஆகியனவும் கிடைத்துள்ளன. இவை கருவூரின் தொன்மைச் சிறப்புக்கு மேலும் சான்றாக விளங்குகின்றன எனலாம்.

## கருவூர்க் காசுகள்

1. **முத்திரைக்காசு** *:* கி. மு. 5 முதல் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு இறுதிவரை உள்ள காலப் பகுதியில் வழக்கிலிருந்த காசுகள் எல்லாம் பல்வகை வடிவங்களில் எழுத்துப் பொறிப்பு இல்லாது சிறுசிறு முத்திரை உருவங்களோடு காட்சியளிக்கின்றன. தொடக்க காலத்தில் வெளியிடப்பட்ட இக்காசுகளைப் 'பழங்காசு' (புராணங்கள்) என்று நாணய இயல் வல்லுநர்கள் அழைக்கின்றனர். இவை முதன்முதலாகப் பழங்குடி மக்களின் அரசுகளால் வெளியிடப்பட்டன. எடை, தரம் ஆகிய இரண்டையும் கூட்டித் தனித்தன்மை வாய்ந்த வெள்ளிக்காசுகளை உருவாக்கிய பெருமை மகத அரசுக்குரியது. பாணினி காலத்தில் புழக்கதிற்கு வெளியிட்ட வெள்ளிக் காசுகளைப் "பணம்" என்றும் "கார்ஷாபணம்" என்றும் மக்கள் அழைத்தனர். வட மாநிலத்துக்கும், தமிழகத்துக்கும் நடந்த பண்டமாற்று முறையில் ஏற்பட்ட சிக்கல்களைத் தவிர்த்த இவ்வகைக் காசுகள் பரவலாகப் புதையல்களின் வாயிலாகவும், அகழாய்விலும் தமிழகத்தில் கிடைத்து வருகின்றன. வடநாட்டு

வெள்ளி முத்திரைக் காசுகளைப் போல் சங்க காலத்தில் சேரமன்னர்கள் ஐந்து முத்திரைகளைக் கொண்ட வெள்ளி முத்திரைக் காசுகளை வெளியிட்டுள்ளனர். இதைஉறுதிப்படுத்தும் வகையில் ஐந்து சின்னங்களைச் கொண்ட ஒரு வெள்ளி முத்திரைக் காசு கருவூரில் அமராவதி ஆற்றில் கிடைத்துள்ளது. காசின் முன்புறத்தில் அறுவளைவு முகடு, சூரியன், சந்திரன், ஸ்தூபம், தொட்டிக்குள் மீன் ஆகிய ஐந்து சின்னங்களும், பின்புறத்தில் சேரரின் இலச்சினையான வில்லும், அம்பும் பொறிக்கப்பட்டுள்ளன. இலச்சினையின் மேல் ஒரு பிறைச் சின்னம் காணப்படுகிறது. இக்காசின் மூலம் சங்க காலச்சேரர் வெள்ளி முத்திரைக் காசுகளைத் தங்களது ஆட்சியில் வெளியிட்டுள்ளனர் என்பது புலனாகிறது.

2. **பல்லவர் காசு :** வெள்ளியால் ஆன பல்லவர் காசு ஒன்று கருவூரில் கிடைத்துள்ளது. ஒரு பக்கத்தில் 'வபு' என்ற எழுத்துக்கள் எழுதப்பட்டும், கீழே, நிற்கும் நிலையில் உள்ள காளை இடப்புறம் திரும்பியும் காணப்படுகின்றன. மற்றொரு பக்கத்தில் சங்கும் குத்து விளக்கும் உள்ளன. இவ்வகையிலான செப்புக் காசு ஒன்று திருக்கோவலூரிலும் கிடைத்துள்ளது. இது நந்திவர்ம பல்லவன் காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

3. **சேரர் காசுகள் : (முதல் வகை)** இக்காசுகள் செம்பிலும், நீண்ட சதுர வடிவத்திலும் காணப்படுகின்றன. முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் யானையும், அதற்கு மேல் பண்டைத் தமிழ் எழுத்துக்களும். பின்பக்கத்தில் சேரர்களின் இலச்சினையான வில்லும், அம்பும், கீழே அங்குசமும் காணப்படுகின்றன. கருவூரில் கிடைத்த சங்க காலச் சேரர் காசுகளில் எல்லாம் யானைக்கு மேலே மங்கலச் சின்னங்கள்தான் உள்ளன. ஆனால் இந்தக் காசில் சில எழுத்துக்கள் தெளிவற்ற நிலையில் இருப்பதால் எந்தச் சேர மன்னனால் வெளியிடப்பட்டது என்று உறுதியாகக் கூற இயல

வில்லை. இரும்பொறை மன்னர்கள் வெளியிட்ட "கொல்லிப்புறைக் காசுகள் கருவூரில் கிடைத்துள்ளன. இரும்பொறை பிரிவைச் சார்ந்த மன்னன் ஒருவனால் இந்தக் காசு வெளியிடப்பட்டிருக்கலாம்.

2. மாக்கோதைக் காசு : (இரண்டாம் வகை) அமராவதி ஆற்றுப்படுகையிலிருந்து கிடைத்தவற்றுள் ஒன்று 'சேரமான் மாக்கோதையின்' பெயருடனும் உருவத்துடனும் காணப்படுகிறது. இது தமிழக நாணய வரலாற்றிலேயே மிகச் சிறப்பான கண்டு பிடிப்பாகும். இக்காசு கிடைக்கும் வரை சங்ககால மன்னர்களின் பெயர்களோ, உருவங்களோ பொறித்த வெள்ளிக்காசுகள் கண் டெடுக்கப்படவில்லை.

காசின் முன்புறத்தில் பண்டைத் தமிழ் எழுத்துக்களும், அதன் கீழ் நடுவே வலப்புறம் நோக்கிய அரசனின் மார்பளவு உருவமும் காணப்படுகின்றன. காசின் பின்புறம் எந்தவிதச் சின்னமும் இல்லாமல் வழவழப்பாக உள்ளது. அரசனின் தலைக்கு மேலே 'மாக்கோதை' என்று எழுதப்பட்டுள்ளது. 'ம' என்ற எழுத்தில் குறுக்குக்கோடு சற்று வலப்புறம் நீட்டப்பட்டிருப்பதாலும், 'த' என்ற எழுத்து வளைந்து காணப்படுவதாலும் இந்த எழுத்தின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதி என்று கொள்ளலாம்.

சங்க இலக்கியத்தில் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (புறம்5-2), சேரமான்கோக்கோதை மார்பன் (அகம்6-3), சேரமான் குட்டுவன் கோதை (புறம் 54) போன்ற பெயர்கள் குறிப் பிடப்பட்டுள்ளன. இந்த வெள்ளிக்காசு மேற்கூறிய மன்னர்களுள் ஒருவனால் வெளியிடப்பட்டது எனலாம்.

மூன்றாம் வகை : சங்க காலச் சேர மன்னர்களின் வரலாற்றை அறிய இலக்கியச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கப் பெற்ற நூல் களுள் 'பதிற்றுப் பத்து' ஒரு கருவி நூலாக உள்ளது. அதில் முதற் பத்தும், கடைசிப் பத்தும் இப்போது கிடைக்காத காரணத் தால், முதலில் ஆட்சி செய்த சங்க காலச் சேரமன்னர் யார் என்று

வரையறுத்துக் கூற இயலவில்லை. ஆயினும் இருவழிச் சேரமன்னர்கள் ஒரே காலத்தில் பூசல்கள் ஏதுமில்லாநிலையில் ஆண்டு வந்தமை இந்நூலின் மூலம் அறியக் கிடக்கின்றது. அந்துவன் சேரல் இரும்பொறை என்பவன் பொறையர் குல முதல்வன் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவனது காலம் யாது என்பது தெரியவில்லை. இரும்பொறைப் பிரிவு மன்னர்கள் பதிற்றுப்பத்தில் 7-ஆம் பத்து முதல் 9-ஆம் பத்து வரையில் உள்ள பாக்களின் பாட்டுடைத் தலைவர்கள். சங்க காலத்தில் இவர்களது ஆதிக்கம் கணைக்கால் இரும்பொறையின் ஆட்சியோடு முடிவடைகிறது.

இரும்பொறை மன்னர்கள் வெளியிட்டுள்ள இருவகை நாணயங்கள் இதுவரை கிடைத்துள்ளன. அவையாவன :

(அ) கொல்லிப்பொறை காசு: இக்காசின் முன்புறத்தில் ஒரு தோரண வாயிலின் உள்ளே ஓர் அரசனின் நிற்கின்ற உருவம் உள்ளது. விளிம்பில் பண்டைத் தமிழ் எழுத்துக்களில் "கொல்ஈப் புறை" என்று எழுதப்பட்டுள்ளது. பின்புறம் வில்லும் அம்பும் உள்ளன. அருகில் கரைகளுக்கிடையில் நீரில் இரு மீன்கள் நீந்துகின்றன. மலையின் உருவம் வளைவுகளாகக் காட்டப்பட்டுள்ளது. ஒரு சதுரத்தின் உள்ளே உள்ள உருவம் தேய்ந்து தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது.

இக்காசு கொல்லிப்பொறையன் என்பவனால் வெளியிடப்பட்டது என்று கருதப்படுகிறது. இக்காசின் பின்புறம் 'வில்' சிறப்பாக உள்ளது.

(ஆ) கொல்லிரும்பொறை காசு: கொல்லிப்புறை என்று பெயர் பொறிக்கப்பட்ட காசினை ஒத்து, ஆனால் இறுதியில் 'அன்' விகுதி பெற்று 'கொல்லிப் புறையன்' என்ற பெயருடன் மற்றொரு காசு கிடைத்துள்ளது. இக்காசு வடிவமைப்பில் வட்டமாகவும், தடித்தும், வேறு சில சின்னங்களையும் தன்னகத்தே தாங்கியுள்ளது.

இந்தக் காசின் முன்புறத்தில் தோரணவாயிலின் நடுவே கம்பீரமான தோற்றத்துடனும், வலது கையில் ஒரு போர் ஆயுதத்துடனும் அரசன் ஒருவனின் முழு உருவம் தோற்றமளிக்கிறது. மன்னனின் இடதுபக்கம் நெடிய வேலியிட்ட மரம் ஒன்றும், வலது பக்கம் மூன்று மீன்கள் ஒன்றன்பின் ஒன்றாக மன்னனின் பாதங்களுக்குக் கீழாக வேலியிட்ட மரத்தை நோக்கி நீந்தும் நிலையிலும் காணப்படுகின்றன.

2. **உரோமானியக் காசுகள் :** தமிழ்நாட்டில் கி. பி. 15 முதல் கி.பி.395 வரை வெளியிடப்பட்ட உரோமானியக் காசுகள் கிடைத்திருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை திருச்சி மாவட்டம் கருவூரிலும் அதைச் சுற்றியுள்ள கொங்குநாட்டுப் பகுதிகளிலும் கிடைத்துள்ளன. தங்கக் காசுகளும், வெள்ளிக் காசுகளும், செப்புக் காசுகளும் கிடைத்துள்ளன. இக்காசுகளின் தலைப்புறம் உரோமானிய அரசனின் தலையும் பெயரும் இருக்கும். பின்புறம் எழுத்துக்களும் அந்நாட்டு உருவங்களும் இருக்கும்.

கருவூரில் கிடைத்துள்ள காசுகள் பின்வருமாறு :-

| | அரசன் | இடம் | கிடைத்த ஆண்டு |
|---|---|---|---|
| 1. | அகஸ்தஸ் | கரூர் | 1878 |
| 2. | அந்தோனியர் | ,, | 1806 |
| 3. | டைபீரியஸ் | ,, | 1806, 1878 |
| 4. | க்ளாடியஸ் | ,, | 1806 |
| 5. | கான்ஸ்டாடினஸ் கி.பி.323-337 | ,, | |

கருவூரில் கிடைத்த உரோமானிய காசுகள் கி. பி. 1, 2-ஆம் நூற்றாண்டுகளில் உரோமானிய நாட்டுடன் தமிழகம் கொண்டிருந்த வணிகத் தொடர்பினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன.

## சங்க கால வெள்ளி முத்திரை

கருவூரில் பண்டைத் தமிழ் எழுத்துக்கள் பொறித்த வெள்ளி முத்திரை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முத்திரையில்

காணப்படும் எழுத்தமைதியைக் கொண்டு இது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கொள்ளலாம். சதுர வடிவமான இந்த முத்திரை மங்கலச் சின்னங்களோடும் 'குறவன்' என்று பண்டைத் தமிழ் எழுத்தில் எழுதப்பெற்றும் காணப்படுகிறது.

முத்திரையில் பொறிக்கப்பட்டுள்ள மங்கலச் சின்னங்களில் திருமருவிற்கு (ஸ்ரீவத்ஸம்) முக்கியத்துவம் கொடுத்து மற்ற சின்னங்களைவிடப் பெரிதாக அச்சிடப்பட்டுள்ளது. திருமருவிற்கு வலப் பக்கத்தில் நந்திபாதமும், இடப்பக்கத்தில் பிறையும், மேல்பக்கத்தில் 'குறவன்' என்ற சொல்லும் காணப்படுகின்றன.

கருவூரில் அமராவதி ஆற்றங்கரையில் அண்மையில் சங்க காலத்தைச் சேர்ந்த மோதிரங்கள் சில கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்று பொன்னாலும், மற்றொன்று வெள்ளியாலும் ஆனவை. இரண்டு மோதிரங்களின் முகப்பிலும் பண்டைத் தமிழ் எழுத்துக்களில் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் கிடைத்துள்ள மோதிரங்களில் இவையே மிகப்பழமையானவையாகும்.

1. பொன் மோதிரத்தின் எடை 3·72 கிராம். இது ஒரு முத்திரை மோதிரம் ஆகும். ஆகவே அதன் முகப்பிலுள்ள வாசகம் வலமிருந்து இடமாக மாற்றிப் பொறிக்கப்பட்டுள்ளது. இதை 'ஊபாஆன்' என்று வாசிக்கலாம். இந்த வாசகத்தின் பொருள் தெளிவாக விளங்கவில்லை. இது ஒரு சிறப்புப் பெயராக இருக்கலாம் என்று மட்டுமே ஊகிக்க முடிகிறது.

2. இந்த மோதிரத்தின் முகப்பில் காணப்படும் பெயர் 'தித்தன்' ஆகும். சங்க காலத்தில் தித்தன் என்ற பெயர் கொண்ட சோழன் ஒருவன் உறையூரிலிருந்து ஆட்சி செய்ததை 'நொச்சிவேலித் தித்தன் உறந்தை' என்று சங்க இலக்கியம் (அகம்-22) குறிப்பிடுகிறது.

**3. இலச்சினை மோதிரம் :** கருவூரில் அமராவதி ஆற்றுப் படுகையில் கிடைத்துள்ள இம்மோதிரத்தின் எடை 15·6 கிராம்

ஆகும். இதன் முகப்பில் 25மி.மீ நீளமும் 15மி.மீ அகலமும் கொண்ட ஒரு குழிவான நீள்வட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அதனுள் ஒரு தலைவனும் தலைவியும் இணைந்து நிற்கும் கோலம், இலச்சினை யாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தப்பொன் இலச்சினை மோதிரம் சங்க காலத்தைச் சேர்ந்தது என்றும் சுமார் கி.பி.முதல் நூற்றாண்டில் செய்யப்படடது என்றும் கூறலாம். சங்க காலச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகக் கிடைத்துள்ள முதல் புறச்சான்று என்ற தனிச் சிறப்பினை இச்சிற்ப மோதிரம் பெறுகிறது.

4. கருவூரில் மற்றொரு வெள்ளி மோதிரம் கிடைத்துள்ளது அதில் காணப்படும் எழுத்தமைதியைக் கொண்டு, இது கி.பி. இரண் டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கணக்கிடப்படுகிறது.

மோதிரத்தில் "பேர் அவதான்" என்று குறிக்கப்பட்டுள்ளது. இம்மோதிரத்திற்குரியவன் பெயராக இது இருக்கலாம். பேர் அவதான் என்பதைப் 'பேரறிஞர்' அல்லது ஒரு குறிப்பிட்ட மதத்தில் ஆழ்ந்த பக்தியுடையவர் என்று கொள்ளலாம்.

5. கருவூரில் தங்கத்தினால் ஆன மோதிரம் ஒன்று கிடைத் துள்ளது. இம்மோதிரத்தில் 'தாயன் ஒதலன்' என்று பொறிக்கப் பட்டுள்ளது. தாயனின் மகன் ஓதலன் என்று பொருள் கொள்ளலாம். சங்க காலத்தில் தாயங்கண்ணனார் என்ற புலவர் ஒருவர் வாழ்ந் திருக்கிறார். தாயன் என்றால் உரிமையுடையவன் என்று பொருள். ஓதல் ஆந்தையார் என்ற புலவர் குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகிய தொகை நூல்களின் சில பாடல்களைப் பாடியுள்ளார். ஓதலாந்தைக் கூட்டம் என்ற குடிப்பெயர் ஒன்று கொங்கு நாட்டில் இன்றும் வழக்கில் உள்ளது. ஆதலால் ஓதலன் என்ற பெயரையும் மக்கள் கொண்டிருந்தார்கள் என்று உணரலாம்.

## கருவூர்க் கோட்டை

கருவூர் - ஈசநத்தம் சாலையில் நினைவுச் சின்னம் ஒன்று உள்ளது. 1783 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திப்பு சுல்தான் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கருவூர்க் கோட்டையை ஆங்கிலேயர் படை தாக்கி வெற்றி கொண்டது. அந்த வெற்றியின் நினைவாகவும் அப்போரில் இறந்தோர்க்கு அஞ்சலி செலுத்தவும் இந்நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

THIS OBELISK
COMMEMORATES THE SIEGE OF THE
FORT OF CARROR
AND ITS EVAGUATION ON THE APRIL 1783
DURING WHICH OPERATIONS THERE
WAS SUSTAINED A LOSS OF
1 OFFICER LIEUTENANT STANLY 102 REGT KILLED
19 EUROPEANS KILLED AND
30 SEPOYS WOUNDED

இச்சண்டை 1780 முதல் 84 வரை நடந்த இரண்டாம் ஆங்கில-மைசூர்ப் போரின் பகுதியாகும், 1800ல் கருவூர்ப் பகுதிக்கு புக்கானன் வந்தபொழுது தாராபுரத்தில் ஆட்சி செய்த ஆட்சியாளர் மேஜர் மேக்லியட் அவர்களின் ஆட்சியில் கருவூர் இருந்தது. ஒரு குதிரைப்படை கருவூர் கோட்டையைக் காத்து வந்தது. கருவூர் கோட்டை மிகவும் பெரியதாகவும் பசுபதீசுவரர் ஆலயத்தை உள்ளடக்கியும் இருந்ததாக அறிய முடிகிறது. கருவூர் நகரில் ஒரு பகுதி கோட்டை மேடு எனவும், மற்றும் இங்குள்ள கோயில் கோட்டைக் கோயில் எனவும் அழைக்கப்படுவது முன்பு கோட்டை இருந்ததை உறுதிபடுத்துகின்றன.

## கருவூர் அகழ்வைப்பகம்
## தொல்பொருட்கள்

**முதுமக்கட்தாழி:** கருவூர் - கோயமுத்தூர் சாலையில் சின்ன ஆண்டான் கோயில் என்ற இடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட இரண்டு முதுமக்கட்தாழிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை பெருங் கற்காலத்தைச் சேர்ந்தவை. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. (உயரம் 1 மீ. சுற்றளவு 2 மீ. உயரம் 92 செமீ. சுற்றளவு 2 மீ. 56 செமீ.

**பெருங்கற்காலப் பானைகள் :** கருவூரைச் சுற்றியுள்ள பல ஊர் களில் பெருங்கற்காலப் பானை ஓடுகளும், பெருங்கற்கால ஈமச் சின்னங்களும் உள்ளன. சேரர் கல்வெட்டு காணப்படும் புகளூரி லுள்ள மேல்நிலைப்பள்ளியில் பூமியைத் தோண்டும் பொழுது கிடைத்த கருப்பு-சிவப்பு மட்கலங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள் ளன. இவை உடையாமல் முழுமையான மட்கலங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு வடிவ மட்கலங்கள், மட்கலங் களை வைக்க உதவும் பீடங்கள், வாய் அகன்ற மட்கலம், மூடிகள் போன்றவை உள்ளன. சிலவற்றில் வெள்ளை வண்ணத்தில் வளைந்து செல்லும் கோடுகள் காணப்படுகின்றன. முதுமக்கட் தாழியிலிருந்து கிடைத்த எலும்புகள், குறியீடு இடப்பட்டுள்ள பானை ஓடுகள் போன்றவையும் காட்சியில் உள்ளன.

**கருவூர் அகழாய்வு ;** கருவூர் நகரின் தொன்மையை அறிவதற் காக இங்கு 1977-1980 ஆண்டு வரை அகழாய்வு செய்யப் பெற்றது. கருவூர் அகழாய்வுக் குழிகளின் பல்வேறு தோற்றங்கள் அடங்கிய நிழற்படங்கள் காட்சிக்கு உள்ளன.

அகழாய்வில் கிடைக்கப்பெற்ற கல்மணிகள், சுடுமண் மணிகள், உரோமானியப் பானை ஓடுகள், தந்தத்திலான பொருட்கள் வளையல் துண்டுகள் போன்ற தொன்மையான கலைப்பொருட்கள்,

வைக்கப்பட்டுள்ளன. இவைகள் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவை. கருவூர் நகரின் தொன்மையையும், வெளிநாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பினையும் இங்கு வைக்கப்பட்டுள்ள தொல்பொருட் களால் அறிய முடிகிறது.

மேலும் கருவூரைச் சுற்றியுள்ள பல ஊர்களில் நத்தமேடு என அழைக்கப்படும் மேடுகள் காணப்படுகின்றன. இம்மேடுகளில் பண்டைய மனிதர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களாக பல பொருட்கள் கிடைக்கின்றன. அரவக்குறிச்சியிலிருந்து சேகரித்த பவள மணிகள், சங்குவளையல்கள், மண்மங்கலம், ஆத்தூர் ஆகிய இடங்களில் கிடைத்த குறியீடு உள்ள பானை ஓடுகள், அகல் விளக்குகள், சில்லுகள், கெண்டி,வெள்ளைக்கல் துண்டுகள் போன்றவை காட்சியில் உள்ளன.

**செங்கற்கள்**

கருவூர் நகரில் மையப் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்ட செங்கற்கள் (26 x 16 x 4), ஆத்தூர் நத்தமேட்டிலிருந்து கிடைத்த செங்கல் (24 x 15 x 4), கருவூரை அடுத்துள்ள பழைய செயங் கொண்ட சோழபுரத்திலிருந்து சேகரிக்கப்பட்ட செங்கல் (17 x 5) ஆகியவை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சங்க காலத் திலிருந்து சோழர் காலம் வரை செங்கற்கள் பல்வேறு அளவுகளில் செய்யப்பட்டன என்பதை அறிய முடிகிறது.

**சுடுமண் பொம்மைகள்**

தொல்லியல் ஆய்வுக்கும், ஓர் இடத்தின் தொன்மை வரலாற்றுக் கும் சுடுமண் பொம்மைகள் அடிப்படை ஆதாரங்களாக விளங்கு கின்றன. இவை அக்கால மக்களின் இறை நம்பிக்கை, சமுதாய நிலை ஆகியவை பற்றி அறிய உதவுகின்றன.



169347

கருவூரைச் சுற்றியுள்ள மண்மங்கலம், செனப்பிரட்டி, மணவாசி, அரவக்குறிச்சி போன்ற ஊர்களிலிருந்து கிடைத்த சுடுமண் பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. செனப்பிரட்டி என்ற ஊரிலிருந்து கிடைத்த உட்கார்ந்த நிலையில் உள்ள சிம்மம் மிகவும் அழகானது. அரவக்குறிச்சியிலும், மண்மங்கலத்திலும் கிடைத்த பொம்மைகளில், ஒரு பெண் அமர்ந்த நிலையில் இருக்கிறாள். இடுப்பில் ஒரு குழந்தை உட்கார்ந்து அப்பெண்ணின் மார்பைப் பற்றிப் பால் குடிக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற பொம்மைகள் கருவூரை அடுத்த திருக்காம்புலியூர் அகழாய்விலும், பழனிக்கு அடுத்த உத்தமநாயக்கன் பாளையத்திலும், பூம்புகாரில் சாயாவனம் என்ற பகுதியில் நடைபெற்ற அகழாய்விலும் கிடைத்துள்ளன. இத்தகைய பொம்மைகளைத் திருச்சிப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர், 'கொப்பாட்டி அம்மன்' என வழங்குகின்றனர்.

இதைத் தவிர கொங்கு நாட்டுப் பகுதியில் போளுவாம்பட்டி, பனையகுளம், மாட்லாம்பட்டி, கோடிக்கரை, இண்டூர் போன்ற ஊர்களிலிருந்து கிடைத்த சுடுமண் பொம்மைகள் காட்சியில் உள்ளன. பூம்புகாரை அடுத்து உள்ள மேலப்பெரும்பள்ளம் என்ற இடத்திலிருந்து கிடைத்த ஈமத்தாழியின் மேற்பகுதியில் அமைக்கப்பட்ட உருவம், தென்னார்க்காடு மாவட்டம் அக்கடவல்லி என்ற இடத்திலிருந்து கிடைத்த துர்க்கையின் உருவம், புதுக்கோட்டை மாவட்டம் இராஜாளி விடுதி என்ற இடத்திலிருந்து கிடைத்த நாயக்கர் காலச் சுடுமண் பொம்மைகள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

### காசுகள்

கருவூர் நகரிலும், கருவூரை அடுத்து ஓடும் அமராவதி ஆற்றின் கரையிலும் அச்சுக் குத்தப் பெற்றக் காசுகள், சங்ககாலச் சேரர் காசுகள், ரோமானியக் காசுகள், பல்லவர் காலக் காசுகள், சோழர் காசுகள், நாயக்கர் காலக் காசுகள், மைசூர் அரசர் காசுகள், பிற்காலக்

காசுகள் போன்றவை கிடைத்துள்ளன. இவை அனைத்தும் கருவூரின் தொன்மையையும், ஒரு தொடர்ச்சியான வரலாற்றையும் எடுத்துக் கூறும் சான்றுகளாக அமைகின்றன. இவை பற்றி முன்னரே விரிவாகக் கூறியுள்ளோம். அவற்றுள் கொல்லிப்புறை காசு, மாக்கோதை காசு, பல்லவர் காசுகள், மோதிரங்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

பலவகை அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்ட செப்பு மோதிரங்களும், திருமறு (ஸ்ரீவத்சம்) பொறிக்கப்பட்ட மோதிரங் களும் பலவகை முத்திரைகளும் காட்சியில் உள்ளன.

அமராவதி ஆற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட செம்பால் ஆன மணிகளும், தவழும் கண்ணனது உருவமும் காட்சியில் உள்ளன.

### கல்வெட்டுகள்

சேரர் மரபினைப் பற்றிக் கூறும் புகளூர் கல்வெட்டின் படிகள் காட்சியில் உள்ளன.

### நிழற்படங்கள்

கருவூரில் உள்ள கோயில்கள், திருச்சி மாவட்டத்தில் உள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோயிற் சிற்பங்கள், இருக்குவேளிர் காலக் கோயில்கள் முதலியவற்றின் நிழற்படங்களும் உள்ளன.

கருவூருக்கு அருகே கோடங்கிப்பட்டி என்ற ஊரில் முத்தாலம்மன் கோயிலில் திருமாலின் அவதாரங்கள், திரௌபதியுடன் பஞ்ச பாண்டவர், கண்ணப்பன் கண் அளித்தல் போன்ற காட்சிகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இவை 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஓவியங்களின் நிழற்படங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

### ஓலைச் சுவடிகள்

கருவூர் பகுதியிலிருந்து பல ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பட்டுக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

1. ஞானமதியுள்ளான்
2. திருக்குறள்
3. கந்த சஷ்டி கவசம்
4. மருத்துவம்
5. மாட்டுவாகடம்
6. அஷ்டமாசித்து மகிமை
7. ஏர் எழுபது தனிப்பாடல் திரட்டு
8. கருவூர் புராணம்
9. அவினாசி தவப்புராணம்
10. பெரிய புராண வசனம்
11. ஜோதிடம்

### சுதைச்சிற்பங்கள்

செங்கற்களால் உருவங்களை அமைத்து அதன் மேல் காரை பூசப்பட்ட உருவங்களைச் சுதை உருவங்கள் என அழைப்பர். திருச்சி மாவட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்ட சுதை உருவங்கள் காட்சியில் உள்ளன.

### கற்சிற்பங்கள்

சின்னகோதூர் என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்ட துர்க்கை (கி.பி.10-ஆம் நூற்றாண்டு) கருவூர் அமராவதி ஆற்றிலிருந்து கிடைத்த திருமால், ஆத்தூர் கல் ஜன்னல், நந்தி, கருவூர் பசுபதீசுவரர் கோயிலிலிருந்து சேகரிக்கப்பட்ட சோழர்காலத் துண்டு கல்வெட்டு, தென்னிலையிலிருந்து எடுத்து வரப்பட்ட 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் முதலியன காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இந் நடுகல்லில் எழுத்துக்கள் இல்லை.

கருவூர் அகழ்வைப்பகத்திலுள்ள தொல்பொருட்கள் அனைத்தும் கருவூர் மற்றும் தமிழக வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும் சான்றுகளாக அமைகின்றன.

## கருவூர்க் கோயில்கள்

### மாரியம்மன் கோயில்

கருவூர் நகரின் நடுப்பகுதியில் உள்ள இக்கோயிலில் அம்மனுக்கு ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறும்

இவ்விழாவில் அக்கினிச்சட்டி எடுத்தும், பல்வேறு வேடம் பூண்டும் ஆடுபவர்களைக் காணலாம். சங்க இலக்கியங்களில் கருவூரில் உள்ளிவிழா நடைபெற்றதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. அந்த உள்ளிவிழாவின் எஞ்சிய கூறுகள் இம்மாரியம்மன் கோயிலில் தற்போது நடைபெறும் விழாவில் இன்றும் காணலாம்.

### வஞ்சியம்மன் கோயில்

வஞ்சியம்மன், சேரரின் குல தெய்வம் எனக் கருதப்படுகிறது. அமராவதி ஆற்றின் கரையில் வஞ்சியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலிலுள்ள பெண் வாயிற்காவலர் உருவங்கள் பெரிதாக செய்து அமைக்கப்பட்டுள்ளன. பழைமையான அமைப்புடன் கோயில் காணப்படாவிடினும் வஞ்சியம்மன் என்ற பெயருடன் கோயில் அழைக்கப்படுவது சிறப்பானதாகும்.

### கருவூர் பெருமாள் கோயில்

பழைமை மிக்க இக்கோயிலே இலக்கியத்தில் திருவித்துவகோடு என்று குறிக்கப்பெறும் கோயில் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கோயிலில் உள்ள கிணற்றுக்கு அருகில் உருண்டையான ஒரு தூணில் மேலிருந்து கீழாக கல்வெட்டு ஒன்று எழுதப் பட்டுள்ளது. இதில் புகழியூர் வியாபாரி ஒருவர் அன்னதானம், நங்கை தானம் அளித்த செய்தியும், வஞ்சியூர் வைஷ்ணவரோம் என்ற குறிப்பும் காணப்படுகிறது

### வெண்ணெய்மலை முருகன் கோயில்

கருவூர் நகரின் வடபுறம் வெண்ணெய்மலை என்னும் திருத்தலம் உள்ளது. இங்குள்ள குன்றின் மீது முருகப் பெருமானுக்குத் தனிக்கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது பிற்காலக் கோயிலாக இருந்த போதிலும் பக்தர்கள் பலர் கூடி வழிபாடு செய்கின்றனர்.

கச்சேரிப்பிள்ளையார் கோயில்

கருவூர் மாரியம்மன் கோயிலுக்குக் கிழக்கே வாசவி பரமேஸ்வ கோயிலுக்கு மேற்புறம் கச்சேரிப்பிள்ளையார் கோயில் என்ற ஒ பழங்கோயில் உள்ளது.

---

## படங்களின் விளக்கங்கள்

1. முகப்பு அட்டை: "தாயன் ஓதலன்" என் பண்டைத் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட தங்க மோதிர காலம் கி. மு. 2-ஆம் நூற்றாண்டு.

2. முகப்பு அட்டை உட்புறம்: "கொல் ஈப்புறை" என் பண்டைத் தமிழ் எழுத்துக்களும், தோரண வாயிலின் உள்ளே எழில்மிகு அரசனின் தோற்றமும் ஒருபுறம் காணப்படுகிறது. வி அம்பு, நீந்தும் மீன்கள், மலையின் உருவம் ஆகியன மறுபுறமு பொறிக்கப்பட்டுள்ள செப்புக்காசு. காலம் கி பி. முதல் நூற்றாண்

3. பின்புற அட்டை உட்புறம்: பல்லவர் கால வெள்ளி காசு. நந்திவர்ம பல்லவனுடையதாக இருக்கலாம். ஒருபுறம் 'வ என்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டும், காளையின் உருவ பொறிக்கப்பட்டும் உள்ளது. மறுபுறம் சங்கு (அல்லது படுத்திருக்கும் காளையும், குத்துவிளக்கும் உள்ளன. கால கி. பி. 8-ஆம் நூற்றாண்டு.

4. பின்புற அட்டை: "பேர் அவதான்" என்று பண்டை தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள வெள்ளி மோதிர பேர் அவதான் என்ற சொல்லிற்கு பெரியவர் அல்ல ஒரு குறிப்பிட்ட மதத்தில் ஆழ்ந்த பக்தி உடையவன் என்று பொருள் கொள்ளலாம். காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு.

169347



